**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.24/2024 – PW-8**

| | |
|---|---|
| Name | திரு.பூபாலன் |
| Husband/Father Name | வீரராகவன் |
| Village /Area | நெமிலி |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 48 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 26.02.2016 அன்று எனக்கு தொலைபேசி மூலமாக சம்பத்து என்பவர் தனது மகன் தனசேகர் என்பவரை மணி மற்றும் அவரது குடும்பத்தினர் கத்தியால் குத்தி காயம் ஏற்படுத்தியாதகாவும் அதற்காக புன்னை மருத்துவனைக்கு வந்துள்ளதாகவும் தகவல் தெரிவித்தார். நாங்கள் மருத்துவமனை சென்று பார்த்த போது தனசேகர் என்பவரை மேல் சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவமனைக்கு கிருஷ்ணன், தேன்மொழி ஆகியோர்களை மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பி வைத்தனர். ஸ்டான்லி மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே தனசேகர் இறந்து விட்டதாகவும் கிருஷ்ணன், தேன்மொழி ஆகியோர்களை மேல் சிகிச்சைக்காக சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளதாகவும் தகவல் தெரிந்துகொண்டேன். எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக என்னையும் சிம்பு என்பவரையும் 01.03.2016 அன்று திருவள்ளூருக்கு காவல் துறையினர் அழைத்து சென்றனர். அங்கு மாரி என்பவர்

வீட்டில் போலீசார் விசாரணை செய்த போது மாரி என்பவரின் மகன் புருசோத்தமன் என்பவரின் வீட்டில் எதிரிகள் தங்கியிருந்தாகவும் தற்போது இல்லை என்றும் வாக்குமூலம் கொடுத்தார். அவர் கொடுத்த வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து கொண்டனர் அதில் சாட்சியாக நானும் சிம்பு என்பவரும் கையொப்பம் செய்தோம் என்னிடம் காண்பிக்கப்படும் மணி என்பவரின் சகோதரர் மாரி மகன் புருசோத்தமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது அதசா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**ஒம்./—திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**